ஓலை 43 | ஓசை 151 | கடகம்(ஜூலை) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை



# அறிவோம் வள்ளுவம்!

**நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**

தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரிதாகும்.

**Translation:**

In his station, all unswerving, if man self subdue,
Greater he than mountain proudly
rising to the view.

**Explanation:**

More lofty than a mountain
will be the greatness of that man
who without swerving from his domestic state,
controls himself.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல

# இலக்கியப் பேரவை

## நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்

சிவம் அறக்கட்டளை,முகையூர்

## இதழாசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

## வடிவமைப்பு

அ.வில்சன்

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,

மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# கணபதி

சக்தியின் மைந்தனே சகலமும் நீயே - வெற்றி
சரித்திரம் கண்ட சதுர்த்தி ஒளியே
முக்தியும் தருவாய் முழுமுதற் இறைவா - போற்றி
முன்னே நிற்க முழுமை தரவா

பழத்தின் வழியே பாடம் சொன்னான் - வேலன்
பழனி மலையில் பழமாய் நின்றான்
செழிக்கும் வழியைச் சிறப்பாய் தருவான் - சிவனின்
தேர்ந்த கணத்தின் தேவத் தலைவன்



கணபதி என்றதும் கடினம் விலக்கி - காலம்
கனிவாய் கனிய கரைப்பான் விளக்கி
குணத்தின் அதிபதி குடும்பத்தில் வைத்தால் - நாளும்
குன்றாய் மகிழ்வும் கூடும் படிப்படி

வினைகள் முறிக்கும் வீரத் திருமகன் - ஈசன்
வீசிய சூலத்தால் விரிந்தான் கஜமுகன்
அனைத்தும் தருவான் அகத்தில் இருத்த - நேசன்
அரணாய் நிற்பான் அழிவைத் தடுப்பான்

கொழுக்கட்டை லட்டும் கொள்வான் விரும்பி - எங்கும்
கோயில் கொண்டான் கோமகன் அரசடி
விழுதாய் தாங்கி விழுமியம் சொல்வான் - தேங்கும்
வினைகள் அகற்றுவான் விடியல் புகுத்தி

மனத்தில் நினைத்தால் மாயம் சொய்வான் - மகேசன்
மகனோ புல்லையும் மலரச் செய்வான்
உனையே என்றும் உளத்தில் துதிக்க - மூசிகன்
உறைவான் உறவாய் உயிரில் கலப்பான்

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# அப்பா

கடவுளை வரைகிறேன் என்று
தூரிகை தூக்கினாள் மகள்.
கன்னங்கள் மின்னின.
கழுத்து நாசி மூக்கு என
எல்லாம் வரைந்தாள்.
நீண்ட கரத்தினில்
என்ன வரைவது என்றாள்
வழக்கம் போல ஆயுதம் தானே என்றேன்
கண்களில் எதைக் காட்ட என்றாள்
தீமையை எரிக்கும் சூரியப் பார்வை என்றேன்
அன்பும் கருணையும்
போதிக்கத் தானே கடவுள்
பிறகு எதற்கு அசுரனை
வரையச் சொல்கிறாய் என்றாள்
கண்களுக்கு அன்பையும்
கரங்களில் கல்வியும்
வரைந்து நீட்டியவள் சொன்னாள்
கடவுள் உன்னைப் போலவே
இருக்கிறார் அப்பா.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# சிந்தனை துளிகள்!

மரத்தின்
கிளையிலிருந்து
பிரிந்து விழும் சருகுகளை
பற்றியே கவிதை எழுதுகிறேன்
கிளையும் இலையும்
இல்லாத வெற்றுமரம்
காகிதமாகிக்கொண்டிருக்கிறது
எழுதிய கவிதைகளை
தன் இதயத்தில் ஏந்திக் கொள்ளவே

*

எறவானத்தின்
கீழே மண் சுவரில்
கெண்டை மீனை வரைந்து கொண்டிருக்கும்
சிறுவனின் கையில்
முட்களாக கிழிக்கிறது
நீரின்றி
வற்றிப்போன
ஓர் குளத்தின் தடம்.

கவிஞர் ச.சக்தி,பண்ருட்டி

# சந்திராயன்-3

விக்ரம் சாராபாயின்
அறுபதாண்டு காலக் கனவு!
அப்துல் கலாமின் உந்துதல்,
வாழ்த்தோடு சந்திராயன்-3 எனும் விண்கலம்
கண் முன் காட்சியாய் நனவாகி, வலம் வரும்,பூமியை.

குறைந்த எரிபொருளில்
நிறைவாய் நீள் வட்டச் சுற்றுப்பாதை.

நிலவில் விண்கலம்
இலகுவாய் தரையிறக்கம் செய்ய
இலக்கை நோக்கிப் பயணித்த நான்காம் நாடு பாரதம்.

முத்தமிழாய் விண்கலத்தில்
மூன்று கலன்கள்.

நிலவின் சுற்றுப்பாதையில்
உலவ உதவும்
உந்துவிசை இயந்திரம்
நிலவைச் சுற்றும்.

நிறமாலைக் கதிர்களைத் தரமாய்
நிலமனுப்பும் ஆய்வுக்கருவி தரையிறங்கும்.

கதிர்களைப் பிரதிபலிக்கும்
ஒளியினில் , உயிர்
வளித் தேடும் முயற்சி.

நிலவின் அதிர்வுகள்
வெப்ப அயனிக் கூறுகள்
தப்பாமல் ஆயும்,அது.



நிலவை ஆறுமாதம் சுற்றியே
நிலவில் இறங்கும்
கலனின்
வாழ்நாளோ
பதினான்கு நாட்கள்.

நிலவின் தரைப்பரப்பில்
மணலை ஆயும்
ஏபிக்ஸ் எக்ஸ்.

தரை,பாறை கனிமங்களை
ஆல்பா கதிர் பரப்பி
துளையிடும்.
கண்டறியும் கனிமங்களை.

நிலவில் களங்கம்
என்ற பாறைகளில்
ஆய்வு.

பாரதத்திற்கு இனியில்லை தோய்வு.
இந்தியரின் இசை
விண்ணைத் தொட்டு
மண்ணில் எதிரொலிக்கும்.

பாரதத்தின் பெருமையைப்
பாரதிர முழங்கும்,
சந்திராயன்-3.
நாமும் பாராட்டுவோம்,
அதன் வெற்றிக்காய்ப்
போராடிய நம் நாட்டு விஞ்ஞானிகளை!

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# அழைப்புகள் சுவாரசியமானவை

சிலநேரங்களில்
ஏற்கப்படுகின்றன.

சிலநேரங்களில்
விடுக்கப்படுகின்றன.

சிலநேரங்களில்
நிராகரிக்கப்படுகின்றன.

சிலநேரங்களில்
மகிழ்வில் ஆழ்த்துகின்றன.

சிலநேரங்களில்
அழுகையில் கரைகின்றன.



சிலநேரங்களில்
நீங்கா நினைவாகின்றன.

சிலநேரங்களில்
பிடிவாதத்துடன் மறந்துபோகின்றன.

சிலநேரங்களில் உறவின் துவக்கமாகின்றன.

சிலநேரங்களில்
அதுவே இறுதியாகின்றன.

எப்படியாயினும்

அழைப்புகள் சுவாரசியமானவை தான்.

கவிஞர் கீர்த்தனா பு,கோபி

# யூகம்

எழுதிக் கொண்டிருக்கும்
அலைபேசி கவிதையில்
இடையிடையே
இணையாய் வந்தமர்ந்த
சிட்டுக்குருவிகள்
கிரீச்சிட்டு சென்றது
மூன்று முறை.

அவையிரண்டும்
சொல்லியது
என்னவாகவிருக்கும்
என யூகிக்கும் தருணத்தில்.

அந்த இரண்டு
சிட்டுக்குருவிகளும்
குருவி இனத்தின்
கடைசி குருவிகள்
என்பது மட்டும்
நிதர்சனமான உண்மை
என எழுதி
அலைபேசி கவிதையை
நிறைவு செய்கிறேன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்



அகர முதல

# சுற்றந்தழால்

(அதிகாரம் 53)

வறியோனாக்கப் பட்டோனொருவனை
உறவுமறவாது பாராட்டி.
உயர்த்திப்பேசும் உயர்பண்பும்
சுற்றத்தாரிடம் உண்டாம்.

அன்பகலா சுற்றமொருவர்க்கு
அமையுமானால் அஃதவர்க்கு.
மென்மேலும் குறைவில்லா
நலன்பல சேர்த்தளிக்குமாம்.




சுற்றத்தாரோடு உளங்கலந்து
பழகாதான் வாழ்க்கை.
கரையில்லா குளப்பரப்பு
நீர்நிறைந்தார் போன்றதாம்.

சுற்றமுடன் சூழ்ந்திருந்து
அவர்தழுவி அன்பொழுகுதல்.
செல்வமடைதலினும் சிறந்த
நற்பயனாய் அமையுமாம்.

சுற்றத்திற்கு பொருளீதலும்
இன்சொல்கூறுதலுமாகிய இரண்டும்.
செய்யவல்லோனை அவன்சுற்றத்தார்
சுற்றிச்சூழ்ந்து கொள்வராம்.

உவந்தளிக்கும் இயல்புடன்
சினமழித்துவாழும் ஒருவனிருந்தால்.
அவன்போல் சுற்றமுடையார்
உலகில் எவருமிலராம்.

தான்கண்ட உணவை
மறைக்காது இனம்அழைக்கும்.
காக்கைபோன்ற ஆக்கமும்
அத்தகைய இயல்பினர்க்குரியதாம்.

ஒக்கப்பொதுவகையாய் நோக்காது
தக்கசிறப்பிற்கேற்ப நோக்கிடின்.
அவ்வரசை விரும்பிடும்
சுற்றத்தார் பெருகுவராம்.

பிரிந்துசென்ற சுற்றத்தார்
பிரிந்ததன் காரணமறிந்து.
உற்றபடியதை களைந்திடின்
உடனவரே வந்துசேர்வராம்.

அர்த்தமின்றி பிரிந்துசென்று
காரணம்பற்றி திரும்பிவந்தோனுக்கு.
அவன்நாடியதை ஈந்தவனைத்
தழுவிக்கொளல் அரசுக்குநலமாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# சர்க்கரை வாங்க

சர்க்கரை வாங்க கடைக்கு வந்தவனா,
நீ சுருக்குனு எறும்ப கடிக்கற உன் கண்ணால
உன் கண்ணால ஒரக் கண்ணால.
இப்ப ஒரமா நிக்கற உன்முன்னால
காந்த கண்ணால.

அடியே பூங்கொடியே
என் மனசுக்குள் பூக்கறயே,
மெதுவா பூக்கறயே,
மல்லிகை மொட்டு கண்ணால,
கொஞ்சமா பார்க்கறயே
மெதுவா நடக்குது என் மனசுக்குள்,
காதல் பூக்கதடி,
காத்துல மணமா வீசறியே.
அடியே பூங்கொடியே.
மெதுவ பார்க்கறயே.
உன் பேர கேட்ட
கரும்ப இனிக்குதடி
காதல் தேன்கொடியே.



மழை வர மாதிரி இருக்குது,
நீ வந்து நின்ன மனசுக்குள்ள.
உன்ன பார்த்து வீசுதடி
தென்மேற்கு பருவ காத்து.
நாம் ஒரமா நிக்கலாம் பார்த்து,
ஒஞ்சி நிக்கட்டும் ஆடி காத்து.
இப்ப நமக்குள்ள வீசுதுதே,
நல்ல காதல் காத்து
நல்ல காதல் பாட்டு.

கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# கூவம் நதிக்கரையில்

கூவம் நதிக்கரையில்
கோவக்க நட்டு வைத்தேன்
கோபப்படாமல் வளர்ந்து
என் நெஞ்சில் நிறைந்து

கொடி கொடியாய்
படர்ந்து வளரும்
கோபக்காரி மீனாம்மாள்
நதியிலே விளையாடி

அங்கும் இங்குமாய்
கூவம் நதிக்கரையில்
அங்கும் இங்குமாய்
நீந்திக் கொண்டு போறவளே

என் ஆசைக்கார மீனாம்மா
என் மீது உனக்கு என்னமா
கோபம் வந்தது என் மீது
அந்தி மறைந்தாலும்
உன் தொந்திக்கு ஆசை தீர
உணவளித்து.



கவிஞர் தமிழருவி.ஏ.கோபி,நத்தம்

# வேர்களை தாங்கிடும் விழுதுகள்

அனாதை இல்லங்கள் ஆலமரத்திற்கு இல்லை
வேரற்ற நிலையிலும் தாங்கிடும் விழுதுகள் இருப்பதால்
ஆறாம் அறிவற்ற ஆலமரம் கற்றுத் தருது
ஆறறிவு பெற்றது எங்கே கேட்குது?

ஆயிரம் ஆண்டுகளும் வாழ்வது வியப்பில்லை
சூறாவளியிலும் புயலிலும் வேரினை தாங்கிடுதே விழுதுகள்
சின்ன சலசலப்பிற்கே வேரினை வீழ்த்திடுதே
வீணாய் போன இந்த மானுடம்

அடிமரத்தினை காப்பதில் தான் விழுதுகளுக்கு என்ன அக்கறை
கரங்களை கோர்த்து வீழ்ந்திடாமல் தாங்குது
பார்த்திடும் பொழுதே மனசு பரவசமாகுது
பாரஞ்சுமந்து விழுதினை தாங்கிய வேர்கள் இளைப்பாறுது

பத்து மாதம் சுமந்து பெற்றது பாராமாய் நினைக்குது
தள்ளாடும் வயதில் பேசக் கூட தயங்குது
பணத்தை கொடுத்தால் மரியாதை கொடுக்குது
இல்லை என்றால் எட்டி உதைக்குது

மானிடராய் பிறந்ததிங்கு மனிதநேயம் இழக்குது
மரமாய் பிறந்ததிங்கு மாமாங்கமாய் வாழுது



கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# என்று ஒழியுமோ?

சாதியும் மதமும்
சாத்தானாக மாற்றம்
நீதியும் நியாயமும்
கழுவில் ஏற்றம்
சகோதர பாசம்
சந்தியில் சீற்றம்
சுயநல வாதம்
சுதந்திரமாய்த் தோற்றம்
கழுத்துவரைக் குதறி
குருதியினை உறிஞ்சும்
கீழ்த்தரமாய் இனவெறி
களியாடி மிஞ்சும்
எழுத்தும் உபதேசமும்
இருந்தும் பயனேது
ஆலயமும் சமயமும்
போதிப்பது தெரியாது
இனவாத மூர்க்கத்தில்
இழிவடையும் மனிதம்
என்றுதான் ஒழியுமோ
உயிர்களின் வதம்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# என் சித்தாந்தம்

எதுவும் நிரந்தரமில்லை
ஒரு நொடியில் அனைத்தும்
தலைகீழாக மாறிவிடும்
மற்றவர்களை மதிக்க கற்றுக்கொள்.

□

பிரச்சனை ஒரு மனிதனைத்
தேடி செல்வதில்லை
பிரச்சனை தான்
அவனைத் தேடிவரும்முன்
அறிந்து கொள்.

□

வாழ்க்கையின் வலிகள்
மரணம் நெருங்கினாலும்
மனம் தளராதே
ஏனென்றால், அது உறுதியானது.

□

சிரிப்பது இயல்பு
ஆனால்
சிந்தித்து உரைப்பது மெய்வு

□

அழகு காமத்தின் லீலை
உண்மை அறிய நிபந்தனையில்
பெண்கள் நிறம் மாறும் கிருமிகள்.

□

மௌனம்
கஷ்டத்தில் சிரிப்பவன்
சிரிப்பை கடவுளாலும்
சிரிக்க முடியாது.



எவன் ஒருவன் தன்
தனிமையில் வலி
அறிகிறானோ
அவனே, அறிவைப் படைக்கிறான்.

□

பழசு புதுமை மாறுவதில்லை
ஆனால் புதுமை பெறும்.

□

மாறாத மனம்
மயங்குமே தினம்

□

நீ உன் நிலையில் மட்டும் இரு
நீதிக்கு வலியில்லாமல்.

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# தொலைதூரப் பயணம்

நிசப்த அவனியில்
மின்மினிகளின் சப்தத்தில்
இலையின் விளிம்பில் விழும்
மழைத்துளி காண

சன்னலோர இருக்கை வேண்டும்.
சாய்ந்திட தோளாய் மதில் இருப்பினும்
அவன் துணை வேண்டிய பேராசைதான்.



கருநீல ஆகாயம்
வெண்பிறை மறைத்த மேகங்கள்
பஞ்சு போலல்லாமல் படிமமாய்
தேங்கிய கருமேகக்கூட்டங்கள்.

திரைவழி பிம்பமாய் மதியும்
எட்டிப் பார்க்க.
விண்மீன்களின் விடுமுறை தினமோ?
இல்லை! ஆலங்கட்டிகளாய் பொழிந்தனவா?

விழிகளின் விருந்தில்
இளைப்பாறிட நாவும் பருகும்
சுடசுட பாலோ தேனீரோ
மன அமைதியும் மூளையின் உறக்கமும்

ஒரு கணத்திலே கிட்டிட
வரம்தான் செய்தேனோ?
வழக்கமாய் பதறும் எண்ணங்களே

சற்று பொறுத்திரு உனை தாங்கிட
எனக்கும் சற்று இளைப்பாறிட
இடம் தந்திடு.

காதல் கலவி வேலை பிள்ளை
கல்வி சிறுகணம் எதுவும் வேண்டாமென
உரைக்கும் என் மனக்குமுறல்
உன் செவி எட்டவில்லையா?

எண்ணங்களில் இருந்து சற்று தூரமான
பயணமாம் இருக்கையிலேயே.

மதில் சாய்ந்து கனவும் அன்றி
அமைதியான அகம் வேண்டி
ஆழ்ந்த நித்திரையில்
சில தருணம்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# தாய்ப்பாசம்

பெற்றவளின் பாசமோ
பெறுமதியானதே
அதைப் பெற்றவர்கள்
அனைவருமே பாக்கியவாதிகளே

மேன்மையானதே
இவளின் பாசமே
மென்மேலும் வேண்டுமே
எந்நாளுமே

பேதங்களற்றதே
இவள் காட்டிடும் அன்பு
அவள் அன்புக்கு நிகராய்
வெகுமதி தான் உண்டோ இங்கு?

மென்மையான அவளுமே
மாறிடுவாளே வீரப் பெண்ணாய்
தான் ஈன்றெடுத்த செல்வங்களுக்காய்

போற்றிட வேண்டுமே
எந்நாளுமே
கூடிட வேண்டுமே
அவள் ஆயுளுமே



கவிஞர் அறூபா அஷ்லா,கல்முனை(இலங்கை)

# அடக்கமுடைமை

**அடக்கமே ஆதுரம்** **(அதிகாரம் 13)**




அடக்கமானவர் தேவர்கள் ஒருவராவார்
அடக்கமில்லை எனில் வாழ்வே இருளாகிவிடுமே.

அடக்கத்தைச் செல்வம் போல் காக்க வேண்டும்
இதை விட பெரிய செல்வம் வேறேது
அறியவை அறிந்து அடக்கத்துடன் பண்புடன்
நடப்போர் வாழ்வு மேன்மையே

அடக்கத்துடன் தன்நிலை மாறாமல் வாழ்பவனின் வாழ்வு
மலையை விட மிக உயரமானதே

செருக்கின்றி அடக்கமாகப் பணிதல் நன்று
இச்செல்வம் செல்வந்தர்க்கு மேலும் ஒரு செல்வம் போன்று

ஐம்பொறிகளையும் அடக்கி ஆளும் ஆமைப் போல்
ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் உறுதி கொண்டோர் வாழ்வானது
ஏழு பிறப்பிலும் மேன்மையே; இது இவர்களைக் காவல் காக்கும்
அரணாகுமே

யாராயினும் எதை காக்காவிடினும் நாவை காக்க வேண்டும்
இல்லையெனில் சொன்ன சொல்லால் துன்பத்துக்கு ஆட்படுவர்

நெல்லை போட்டால் அள்ளி விடலாம்
தீயச்சொல்லைப் போட்டால் துன்பமே

ஒரு குவளைப் பாலில் ஒரு துளி நஞ்சு கலந்ததுபோல்
உதிர்க்கும் சொற்களில் ஒரு சொல் தீயதாயினும்
மற்ற நன்சொல்லும் தீயச்சொல்லே

தீயினால் ஒருவனை சுட்டாலும் வடு மட்டுமே உடம்பில் இருக்கும்
உள்ளத்தினால் ஆறிவிடும் ஆனால் கொடிய சொல்லை உதிர்த்தால்
எக்காலத்திலும் உள்ளத்தில் ஆறாது;
புரையோடியய புண்ணாகிப் போகுமே

கல்விதானே கற்று கோபம்தனை காத்து
அடக்கத்துடன் வாழும் பண்பு கொண்டவரை
அறமே வழி பார்த்து காத்திருக்கும்

**கவிஞர் சுமதி தசரதன்,சென்னை**

# பஞ்சாயத்து

ஆழ்ந்த அறிவும், அனுபவமும்
நல்ல தீர்ப்பை நாடி வந்தோருக்கு
நல்லது எண்ணும் நல் இதயம்
கொண்டவர் நிறைந்த பஞ்சாயத்துகள் இன்று
கள்ளத்தனமும், காசுக்கு விலை போதல், ஆள் பலம்,
அடியாள் பலம் நிறைந்த,
குள்ளநரித்தனம் கொண்ட
ஊழல் மிகுந்த
கட்டப் பஞ்சாயத்தின் முன்
காணாமல் போனதே!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# வேண்டுமொரு அமுதசுரபி

வேண்டுமொரு அமுதசுரபி எனக்கது விருந்தால்
வேண்டவேண்டாம் வேறுயாரிடத்தும் இதுவேண்டுமது வேண்டுமென்று!
திருச்சீரலைவாய் சென்று திருச்செந்தூர் வேலனவனைத்
திருமலைக்குமரன் யானும்கண்டு நன்றியுரைக்கச் சென்றிருந்தேன்;
தீநோயாம் கொரானா எந்தனில்லம் வாழ்வோரைத்
தீண்டாதிருக்க முடிகாணிக்கை அளிப்பதாய் வேண்டியபடி
நீண்டநாள் கழித்துச்சென்று கடனடைத்து மகிழ்ந்திருந்தேன்!



அகவை ஐம்பத்தியெட்டு முடிவில்முடிகா ணிக்கையளித்து கடலாடி
அகவை ஐம்பத்தியொன்பதில் கால்பதித்து கந்தனை
கார்த்திகேயனை இருநாளுமிரவி லுமதிகாலையிலும் சேவித்து
அர்த்தமுள்ளதாய் எஞ்சியவாழ்வும் அமைந்திட வேண்டிவந்தேன்!

மாலையிலே கடற்கரையில் சிறுநேரம் அமர்ந்திருக்க,
மாதொருத்தி அலைபேசியில் சொல்லியவின்னாச் சொல்கேட்டு
செத்தே போயினவென் செவிகளிரண்டும் அதனினும்கொடிதாய்
சீறினாளெந்தன் மனைவியவலச்சொல் கேட்கவாவிவள்
அமர்ந்தவிடம் தேடிவந்து அமர்ந்தீர்கள் என்று!

அலைவாய் நகரில் அலைந்து திரிந்தவேளை
ஆடவனொருவன் ஆலயமருகிலும் இன்னாச்சொல் சொல்லக்கேட்டு
நொந்தது என்னுள்ளம்; கருகியதென் ஆருயிரே!
ஆலயத்துள்ளும் நீண்ட வரிசையில் செல்லும்வேளை
ஆலமரத்தமர்ந் தவண்ணல் மேதாதட்சிணா மூர்த்தியருகில்
ஆலயவர்ச்சக ரொருவர்மற்றவ ரோடரட்டைக்கிடை யில்பீரங்கி
மூக்கைச்சிந்தினார் முட்டாள்த்தனமாய்த் தட்சிணாமூர்த்திக் குமுன்னரே!
முனுகியதெந்தன் மனமோவய்யோ பாவமீசனென சத்தமாகவே!

எண்ணற்ற இரவலர்கள் திருச்சீரலைவாய்த் திருநகரில்;
எம்பெருமானிடம் யாசகம்கேட்போ ரிடம்யாசகம் கேட்கின்றார்!
ஏறுமயில் ஏறிவிளையாடும் இறைவாநீ எம்மனோர்
துயர்தீர தர்மனினட்சயப் பாத்திரமோ மணிமேகலையின்
அயர்ச்சியில்லா அருந்தவப் பணிக்குதவிய அமுதசுரபியோ
எந்தன்கையில் தரவேண்டுமது கொண்டிரவலர்துயர் தீர்ப்பேன்யானே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# வளையல்

மங்கையின் கைக்கு வளையல் அழகாகும்
வளையல் ஓசையில் மழலையும் பேசும்
கர்ப்பிணியின் கையில் அழகு சேர்க்கும்
காதலியின் வருகை காதலனுக்கு தெரியும்
மாமன் உழைப்பில் வாங்கிய வளையல்
மனைவியின் கைகளில் ஆயிரம் பேசும்
அத்தானின் மனதில் அன்பை வரவழைக்கும்
வண்ணங்கள் நிறைந்த கண்ணாடி வளையல்
சிறுமியர் கையில் குலுங்கிட செய்து
அசைந்தாடும் நடையில் வட்டமிட்டு உலாவது
அழகிற்கு அழகு சேர்த்து தருமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# காகம்

வடாகம் கொத்த வந்தால்
விரட்டும் நீங்கள்
மாதத்தில் ஒருநாள்
அழைத்து விருந்திடுவதேனோ



பழம் தின்று
எச்சமாக விதைத்து
மரத்தை வளர்க்க
அதை வெட்டுவதேனோ

ஆக்கிரமித்த வீட்டை
இடித்தால் கொதிக்கிறீர்கள்
என்னுடைய கூட்டை
கலைத்து சிதைப்பதேனோ

பங்கிட்டு பசியாற
தெரியாத நீங்கள்
பங்கிட்டு பசியாறும்
எங்களை கேவலப்படுத்துவதேனோ

எங்களைப் போல
மற்றப் பறவைகளும்
இருக்கும் வரையே
உங்களுக்கான வாழ்வு

பறவை இனமழிந்தால்
பூகோளம் பற்றி எரியும்
புரிதல் உனக்கிருந்தால்
மரம் வெட்டுவதை நிறுத்து

காகத்தின் ஆதங்கம்
உணர்ந்திடு மானிடா
மரத்தை விதை
மழைநீர் சேமி

கவிஞர் செ.இலட்சுமணக்குமார்,ஈரோடு

# நிராகரிப்புகளைக் கண்டு நின்றுவிடாதே

எதிரி செய்வது நிராகரிப்பு தானடா
அதுவே எதிர்த்து போராட கற்றுத்தருமடா
குறைகளை மட்டுமே பார்க்கும் உலகத்திலே
தொட்டது எல்லாம் நிராகரிப்பு தானடா

வளர விடாமல் தடைக்கல்லாய் நின்றே
வளரும் உன்னை முடக்கி போடுவானடா
பொறாமை கொண்ட கூட்டம் இங்கே
அலசி ஆராயுது குறைகளை தானடா

நிராகரித்து ஊனமாக்கிட நினைக்கும் கூட்டமடா
நில்லாது தள்ளிவிட்டு மகிழ்கிறது பாரு
அவன் நினைக்காதது ஒன்று அறிவாயோ
தள்ளி விட்டதால் கற்றது நூறென்று

அமைதியாகப் போனவனை ஆளாக்கியது நிராகரிப்புடா
அஞ்சாது வீரநடை போடவைத்தது இந்த நிராகரிப்புடா
அதிரடி முடிவுகள் எடுத்திட வைத்தே
அகிலத்து வெற்றி வீரனாய் ஆக்கியதடா

திறக்காத பூட்டுக்களை உடைக்க வைத்ததோ
திறமைகளை தட்டி எழ வைத்ததோ
வெறியா ஓடி வெற்றியீட்ட சொல்லித்தந்தோ
நிராகரிப்புகள் உன் நலவென்பதை அறிவாயோ

அகரமுதல

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# சிலப்பதிகாரம் (இரண்டு)

## (1. புகார் காண்டம்)

கடவுள் வாழ்த்து
வெண்கொற்றக் குடைபோன்ற திங்களைப் போற்றுதும்
மண்ணின் உயிர்களுக்கு ஆதாரமான ஞாயிறு போற்றுதும்
தண்ணீரைப் பொழிந்து வளம்தரும் மாமழை போற்றுதும்
கண் போன்று முதன்மையான நகரம் பூம்புகார் போற்றுதும்

புகார் நகரின் சிறப்பு
பூம்புகார் சான்றோர்கள் வாழும் பெருமை படைத்தது
தாம் வாழும் நாட்டை விட்டு எங்கும் போகமாட்டார்கள்
ஆம், சுவர்க்கமே தங்கள் நகருக்கு இணையானது என்பர்
சோம்பேறிகள், ஏழைகள், கள்வர்கள், இல்லாத புகார் .

கண்ணகி மற்றும் கோவலன்
மழையை ஒத்த வள்ளல் தன்மையுடைய மாநாய்க்கன்
அழகு மகள் ஈராறு ஆண்டு அகவையாள் கண்ணகி
பழக மேன்மையான செல்வந்த வணிகன் மாசாத்துவான்
அழகு மகன் ஈரெட்டு ஆண்டு அகவையான் கோவலன்



திருமணம்.
இருபெரும் வணிகரும் ஒரு நன்நாளில் மணம் பேசினர்
தெரு முழுதும் திருமணச் செய்தியை அறிவித்தனர்
திருமகள் யானை மீது  வர இன்னிசையுடன் வரவேற்பு முடிந்தது
பெரிய முத்துப் பந்தலில் அருந்ததி பார்த்து திருமணம் நடந்தது



திருமண வாழ்த்துக்கள்
பந்தலில் விளக்குகள், நீர்க்குடங்கள், பாலிகைகள் எடுத்தனர்
வந்தவர்கள்  மலர் தூவி,  மணமக்களை மனதார வாழ்த்தினர்
இந்த நாள் போல் இன்பமாக  பிரியாமல் இனிதே வாழ்க
அருந்ததி பார்த்து வாத்தியங்கள் முழங்க திருமணம் நடந்தது

2.  மனையறம் படுத்த காதை .
பெருஞ்செல்வந்தர்கள் வாழும் கடல் சூழ்ந்த நகர் பூம்புகார்
தரும வழியில் வெளியூர் உள்ளூர் வணிகர்கள் வாழும் புகார்
ஒருமித்த மக்கள் திருவிழா போல் கொண்டாடும் ஊர் புகார்
தெருக்  கடைகள் நிரம்பி வழியும் பெருமையுடைத்து புகார்

கண்ணகியும் கோவலனும் இனிது வாழ்தல்
எழு நிலை மாடத்தில் நான்காம் தளத்தில் கண்ணகியும் கொழுநனும்
தழுவி இதழ் பதித்து இன்புற்று இனிதே வாழ மாணிக்கத் தங்கக் கட்டில்
பழுதில்லா மலர் மாலைகள் இதயங்களின் நெருக்கத்தில் நசுங்கி கசிய
அழுத மலர்கள் சாபத்துக்கும் பங்கு உண்டு நாளது தேதியில் பிரிந்து போக

கோவலன் கண்ணகியை  போற்றிப் புகழ்தல்
சிவன் முடி பிறைச்சந்திரன் உன் நுதலில் காண நீ அவன் சகோதரியா
மன்மதனின் மலர் அம்பு உன் புருவ வில்லில் புறப்பட்டு தாக்குகிறது
உன் வேல் கண்கள் என் நெஞ்சை துளைத்து உன்னைத் தேடுகிறது
நின் சாயல் கண்டு மயில்கள் தன் தோகையை ஒளித்து ஒடுகிறது
உன் நடையழகில்  அன்னப்பறவைகள் நாணி புதரில்  மறைகிறது
உன் மேனி  அணிகலன்களால் சிறுகு இடை வருந்தும் அறிவாயா?

தொடரும்

கவிஞர் ந.திருக்காமு,புதுவை

# நட்பின் வழியதில்

சிட்டாய்ப் பறந்தாலும்
தட்டாமல் செய்திடுவாள்
மிட்டாய் கொடுத்ததோழி
மனதோடு நினைக்கும் முன்
தூதுவிட்ட கிளி வந்து
காதோடு சொன்னதா ?
நினைத்துக்கொண்டிருக்கிறேன்
நீங்கியவள் வருவாளோ?
நீண்டதூரம் கடந்து சென்றும்
நினைவில்என்னை வைத்தாளோ?
காகிதம் கூடமறுக்கிறதே
கடிதத்தில் கதைப்பதற்கு
சென்ற இடம் வென்றிடவே
நன்மைஉன்னைசூழிதிடட்டும்
நஞ்சு கொண்டமனிதரிடம்
பிஞ்சுமனம் வருந்துவதா?
அறிவாய் இருந்து
அன்புசெலுத்தடி தோழி
தாங்கி கொள்ள நானுமில்லை
பக்கமும் தீர்ந்தது
மைத்துளியும் தீர்ந்தது
எஞ்சியது நம்நினைவு மட்டுமே
தீரும் முன் வந்துவிடு.



கவிஞர் வி.பிரியதர்ஷினி,சென்னை

# வியர்வை நதி

தொப்பாலாக நனைந்து
வரும் அவருக்கு
கவலைகளை கல்லாய்
எறிந்து காயப்படுத்த விடாமல்
வியர்வை நதியே
மறைந்து கொள்கிறது
அப்பாவின் சட்டைப்பைக்குள்.



கவிஞர் சே கார்கவி

# தவம்

இருப்பவர் இல்லாதவரென
வித்தியாசம் காணாது
கரன்சிகளின் மீதே
தவம் கிடக்கும்
நாற்காலிகளின் முன்
விலைப் பட்டியலை
காட்சிப்படுத்துங்கள்

ஒவ்வொரு சேவைக்கும்
கட்டணம் என்னவென்று
தெரியாமல்
வெகுநாட்களாய் -உங்கள்
கதவுகளுக்கு முன்னால்
நாங்கள் தவம் கிடக்கிறோம்.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# கூண்டுக்கிளி

கிளையிலிருந்த கூட்டிலிருந்து
கிளிக்குஞ்சொன்று தவறிவிழ
குட்டிக் காலும் முறிந்ததுவே
குணப்படுத்த எண்ணியே
கூடொன்று செய்தானொருவன்
குஞ்சையும் அதிலிருத்தி
குஞ்சின்பசிக்கு உணவூட்டியே

கொஞ்சி வளர்த்தான் அவன்
கூண்டுக்கிளியைப் பார்த்து
குசலம் விசாரித்ததுவே
கூடில்லாக் கிளியொன்று
குறுந்தானியமும் பழமும்
குறைவில்லாக் கிடைத்திட்டும்
கூண்டு வாழ்வும் வாழ்வோவென
குமுறியதேக் குஞ்சுக்கிளி
இரைதேட செல்கையில்
இரையாவோமோ வேறு
அரைசான் வயிற்றுக்கு என
அஞ்சியஞ்சி வாழ்தலே
அவலமான என் நிலை என
அரற்றியது அடுத்த கிளி
அதுகேட்டக் குயில் கூவியது
அவரவரர் வாழ்வுதனிலே
ஆயிரம் மேடுபள்ளங்கள்
இருப்பதைக் கொண்டே
இன்பமாக வாழந்திடுவோமே.



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம், நாகர்கோவில்

# உழவன் கண்ணீர்

நாட்டின் முதுகெலும்பு உழவு!
உழவன் முதுகெலும்பு முறித்து
கண்ணீர் சமைக்கும் திட்டங்கள்!

உணவு களஞ்சிய அடைமொழி
உருக்குலைந்து போகும் நாள்
தொலைவில் இல்லை!

வளர்ச்சியின் பெயரில் நிலங்கள்
வம்பு செய்பவர்களால் விழுங்கப்பட்டு
விருத்தி இல்லாமல் நிற்கிறது

மாற்றம் முன்னேற்றம் சொற்களை
கசப்பு சொல்லாக எண்ணும் நிலையை
காலம் தந்து விடுமோ!

கரியை வெட்டி எடுக்கபசுமை
வெளி காவு வாங்கப் படுகிறது
நெறியற்ற அமைச்சுக்கள் செய்கை
இயற்கை நோக செய்கிறது!

உணவளிக்கும் உழவன் கண்ணீர்
உலகுக்கு ஆகாது!



கவிஞர் செ.தமிழ்நேயன்

# வசியமாக்கும் வலையொளி

அன்பான பெற்றோரை மறந்து
ஆசையான உடன் பிறந்தோரை விடுத்து!
இன்னிசையுடன் இயற்கையைத் துறந்து
ஈகை என்பதனை அறவே மறந்து!

உலகில் நடப்பனவற்றை பொய்யென எண்ணி
ஊருக்குள் உலவி விளையாடுதலை அறவே மறந்து!
எண்ணும் எண்ணமது செயலிழந்து
ஏற்றமிகு வாழ்வுதனை மறந்து!

ஐயமில்லை எதிர்காலம் என்று மூடனாய் வாழ்ந்து
ஒற்றுமை என்னும் ஆயுதமதை துறந்து!
ஓதுதலே சிறந்தது என்பதனை விடுத்து
ஔவையின் சொற்களை மறந்து!

அஃதாகிய வலையொளியில்
சிக்குண்டு கிடக்கிறோமே!
வசியமாக்குது வலையொளிகள்
அதில் சிக்கி வசியமாகுது அறிவிலிகள்!



உடல் உபாதைகளும் இலவசமாய் வந்து சேர
உண்மை நிலவரத்தை அறிவார் எவருமிலர்
விழித்திடுவோம் தேவைக்கேற்ப
வலையொளியை உபயோகப் படுத்திடுவோம்!

விந்தைகள் நிறைந்திட்ட இப்பூவுலகில்
விகல்பமின்றி வாழ்ந்திடுவோம்!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# குழந்தை பருவத்திலே!

குறும்பு செய்து மகிழலாமே
குச்சி வைத்து ஆடலாமே

குசியாட்டம் போடலாமே
குட்டிக்கரணம் போடலாமே

குணத்தாலே கொஞ்சல் பெறலாமே
குதித்தாடி விளையாடலாமே

குதர்க்கம் பல செய்யலாமே
குப்புற விழுந்து அழலாமே

குபீரென நகைத்து சிரிக்கலாமே
கும்மிருட்டில் ஒளியலாமே

குய்யோ மொய்யோ என கத்தலாமே
குரலெடுத்து  வீச்சில் கத்தலாமே

குலை குலையாக பறித்து உண்ணலாமே
குருகுலமும் சென்று பயிலலாமே

குரைக்கும் நாயை துரத்தலாமே
குல்லா போட்டு அழகுகாட்டலாமே



குவியும் எண்ணம் கவனிக்கலாமே
குழியில் நீருற்று செய்யலாமே

குழைந்த சோறு உண்ணலாமே
குற்றங்களிலே தப்பிக்கலாமே

குறிப்பார்த்து பயிலலாமே
குறை அறியாமல் வாழலாமே

குறைந்த பட்சம் துள்ளித்திரியலாமே
குனிந்து நிமிர்ந்து சந்தோஷிக்கலாமே!

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# சேக்கிழார்

"சே" யென்பது காளையைக் குறித்திடுமே! "கிழா"ரென்னில்
உரிமையாம்! வேளாண்மை மரபுவழி! சிவனடியார்!
நல்லமைச்சர்! பனிரெண்டாம் நூற்றாண்டு வாழ்வினரே!
இரண்டாவது குலோத்துங்க சோழர்தம் முதலமைச்சர்!
நாயன்மார் அறுபத்து மூவர்தம் வரலாற்றைத்
"திருத்தொண்டர் புராண" மென; தில்லைசிவன் "உலகெலா" மென
அடியெடுத்துக் கொடுத்திடவே யாத்திட்டார்! நற்றொண்டை
நாட்டகத்து புலியூர்பேர் கோட்டத்து குன்றத்தூர்
தோன்றியவர்! வேளாளர் மரபினரே! வெள்ளியங்கிரி
அழகம்மை முதல்மகனாய்த் தோன்றிட்டார்! இளவல்பெயர்
பாலறாவாய ரென்பதுவே! இயற்பெயரோ இராமதேவன்
அருண்மொழித்தே வரென்றுரைப்பர்! சிவத்தொண்டு மதிநுட்பம்
இவற்றாலே; மாண்"உத்தம சோழபல்லவன் " "தொண்டர்சீர்
பரவுவா" ராய்; " தெய்வப்புல வ" ரென்றவர்தான் "தெய்வசேக்கிழார் "
பட்டங்கள் உற்றாரே! சீர்உமாபதி சிவாச்சாரியார்
சேக்கிழார்தம் புராணத்தை; மீனாட்சி சுந்தரனார்
சேக்கிழார்மேல் பிள்ளைத்தமிழ் யாத்தனரே! சோழமன்னன்
இரண்டாவது குலோத்துங்கன் அநபாய சோழனுக்கு
மலைகடல்புவி இவற்றினையும் விடப்பெரிது அறிந்திடவே
அரசவையில் வினாதொடுத்தான்! விடைபெறவே ! சேக்கிழார்தம்
தந்தையாம் மந்திரிக்கும் தெரிந்திலது! மகன்சேக்கிழார்
தக்கபதில் பகர்ந்தன்று; அமைச்சராக ஆனாரே!
சிறப்பித்தார் நல் "உத்தம சோழபல்லவன் " பட்டமீந்தே!
நாகேஸ்வரர் மீதுநாட்டம் கொண்டதனால் குன்றத்தூர்
தன்னிலவர் கோயிலது கண்டாரே! சோழனுக்குச்
சேக்கிழார்தாம் எடுத்தரைத்தார்: நற்சுந்தர நாயனார்தம்
"திருத்தொண்டர் தொகை " யதுவும்; நம்பியாண்டார் நம்பியாத்த
"தொண்டர்தம் அந்தாதி "! நாம்சுவைத்து உய்வோமே!




கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# யாரோ யாருக்கோ?

பருவத்தின் படியில்
அமர்ந்த அழகின்
அதிகாரத்தில்

கல்லெறிந்து சென்ற
விழியின் வீச்சில்
சொல்லாது போன மொழிக்கு
உயிர் உண்டென உணர்ந்த நொடி

துணைகள் மாறி
துடைத்துக் கொண்டது
முதல் காதலின் கோட்டை

அழியாது ஆசையுடன் தழுவியது
கடந்து போன காதலை
ஒற்றை நொடிக்குள்
உணர்ந்த உள்ளங்கள்

கரையேறியது
எதார்த்த வாசலில்
இரு உள்ளக் காத்திருப்பில்

சொல்லாமலே
சொக்க வைத்து சிக்கிய
சிலிர்த்த உணர்வுகள்


நடப்பதும் நகர்வதும்
வாழ்வின் விதி



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# நெஞ்சே எழு !

தூற்றிய கைகள் எல்லாம்
துவண்டு வீழ
தாழ்த்திய விழிகளெல்லாம்
தலை நிமிர்ந்து பார்க்க
தூக்கம் மறந்த இரவுகளும்
துக்கம் மறந்து மீள
துரத்திய கனவுகள் எல்லாம்
துவளாமல் ஈடேற
தோன்றிய நம்பிக்கையும்
தூணாய் உருமாற
நெஞ்சே எழு.
நெஞ்சே எழு !




கவிஞர் சந்தியா பாவலன்,வேலூர்

# நினைவுப்புகை

பக்கத்து
பள்ளிக்கூட மரக்கிளையில்
குந்திக் கூப்பாடு போடுது
குயிலொன்று
இவள் அடுப்பூதும் போது.

இதே பள்ளி வகுப்பறையில்
இவளோடு இணைந்து
கூவிய குயிலொன்று!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# பாசம்

பாலைவனமாக இருந்த என் மனதில்,
அன்னப்பறவை போல் நீ பறந்து வந்து,
தென்மேற்குபருவக்காற்றை போல் உன்பாசத்தை
தூவிச் சென்றதன் மூலம்,
பசுமைமாறா வனமாக மாறியது
என்மனம்



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# என் கண்ணம்மா

அழகான இருளில் நினைவுகளின்
தாலாட்டு

எங்கிருந்தோ சிரிக்கிறாள்
எனக்குள் நிலவொளி

நீட்டிமடித்து துயில் கொள்ளும்
தேவதையே விழிகளில்
வரைந்து பார்க்கிறேன்

நினைவுகளோடு நின்னையும் சேர்த்தே
சுமக்கும் பொழுதுகளில் உன் விழியில்
அழியா சித்திரம் நான்

பாரதிக்கு சொல்லி விட்டேன்
என் கண்ணம்மா பேரழகியடா

உன்னை நினைக்கும்
மனம் உன்மத்தமாகுதடி

என்னிலே தனையெழுதி கவி
படைத்ததாய் பீற்றுவான்
பாரதியின் சரணடைந்த வரிகளுக்குள்
நான் உன்னிலே தேடுகிறேன்

பீற்றுவதற்கல்ல பேரழகே
எனை தேற்றும் தேவதையே!



கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை

# அன்னமளிப்பவர்

அகிலத்திற்கு
அன்னம் அளித்த

அவரின் கை
சுத்தம் எவரிடமும்
இல்லை.

அனைவருக்கும்
உளமார அன்னமிட்டு

அரை வயிறு உண்ணும்
அவரே அனைவரின்

நன்றிக்குரிய
மதிர்ப்பிற்குரிய
மானுடன்.

சமைத்தது அன்னையாகினும்
விதைத்தது அவரல்லவா.

அந்த நல் உள்ளங்களை
போற்றிட வேண்டாம்.

அவரின் அருமை உணர்ந்து
மதித்திடுவோம்.

விவசாயி.



கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# வானச்சாம்பல்

நீலம் கரைந்தொழுகும்
வானச் சாம்பல்களில்
சந்தேகமற்ற இறக்கைகளுடன்
சாகசப் பறவைகள்.

மரணமேற்ற சில
சிறகுத் துணுக்குகள்
நிலம் சேர்கின்றன
நடுகல் விதைகளாய்.

விதைகள் முளைத்து
பயணம் தொடரும்
பீனிக்சுகள்
வானச் சாம்பல்களில்
மீண்டும்
நீலம் வரைகின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# ஏன் இந்த தூரம்?

நடப்பவனுக்கே சாலையின் நீளம் தெரியும்
விழிப்பவனுக்கே இரவின் ஆழம் புரியும்
இரவு தேரில் நிலவு இளவரசி
விண்மீன்கள் படைகளோடு பாதுகாப்பெடுத்து
உலா வரும் நேரம் இது

நானும் இங்கே உன்னை நினைத்து
நீயும் அங்கே என்ன நினைத்து
ஏங்கும் தருணம் இது
வாழ்க்கை கனக்குதே நமக்கு

நமக்கிடையில் உள்ள உடலின் தூரம்
பல மயில்கள் ஆனாலும்
நம் மனதிற்கிடையில் உள்ள தூரம்
அனுவின் அளவே இருந்தும்
இத்தூரம் நீண்ட இடைவெளியை தருவதாய்
என் நெஞ்சம் உடைந்து போகுதன்பே

என் உயிரோ உணர்வோ கனவோ
என் உலகமோ யாதும் நீயாகும் போது
எனக்கு வேண்டாம் இந்த தூரம்
இருள் கலந்த இந்த நேரம்



உன்னை எண்ணும் என் ஏக்கம்
கலங்குதன்பே என்னிரு விழிகளின் ஓரம்
வேண்டும் நீ என் பக்கம்
காலம் தோறும் உன்னோடு கைகோர்த்து
நான் வாழ என் உயிரே

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்

# கூட்டுப் பிரார்த்தனை

இம்மானிட பிறவியில்
எதிர்கொள்ளும் பிரச்சனைகள்
ஒவ்வொருவருக்கும் வேறு, வேறேயாகுமே!
நம்மில் பலர் பணத்தால்,
எதிர்கொள்ளும் பிரச்சனைகளை
சரிசெய்ய பல வழிகளில் - அதில்
குறுக்கு வழிகளையும் காண்கின்றனரே
பலர் கோயில்களுக்குப் போய் வந்தால்
சரி செய்துக் கொள்ளலாம் என்ற
மனப்பான்மையினால் போகிறார்கள்.
தீர்ந்து விட்டது என்றால் சுகமே!
சிலர் நோயால் அவதிப்பட்டும் அதனால்
மனம் வேதனைப்பட்டும், அல்லல்
அடைகின்றனரே!
நம் கர்ம வினைகளுக்கேற்பவே
அவரவர் துன்பத்தை அடைகின்றனர்.
இதில் மனம் வருந்தி திருந்தியும்
நற் காரியங்கள் செய்தும்
பரிகாரங்களும், பூசைகளும் செய்தும்
தீர்த்துக் கொள்கின்றனர்.
தனி மனித பிரார்த்தனையை விட
கூட்டுப் பிரார்த்தனை ஜெயமானதே!
கூட்டுப் பிரார்த்தனையில் பலர்
மனமுவந்து மற்றவர்களுக்காக
ஆண்டவனிடம் வேண்டும் போது
அங்கே ஆண்டவன் செவி சாய்க்கின்றான்.
மதம், மொழி, ஜாதி இவற்றுக் கெல்லாம்
அப்பாற்பட்ட இக் கூட்டுப் பிரார்த்தனையில்
நாம் பங்கு கொண்டு நம்மையும்,
பிறரையும் உய்ய வைப்போமாக!




கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி,ஊத்தங்கரை

# பிஞ்சு மனமும் அன்புக்காய் ஏங்கும் கொஞ்சம்

கண்களில் கண்ணீர் கொஞ்சம்!
பிஞ்சு மனதில் குழப்பம் கொஞ்சும்!
கனவுகளிற்கு இங்கே ஏது பஞ்சம்?
கண்ணெதிரே நிகழ்ந்த நிஜங்களுக்கு ஏது பஞ்சம்?
அதில் நிதம் நினைவுகளே அவளுக்கென எஞ்சும்!
அன்புள்ளங்களை அவள் மனதும் கொஞ்சும்!
அவரிடத்தே அன்புக்காக மனமது கெஞ்சும்!
உள்ளங்களால் உடைக்கப்பட்டதால்
உதிர்ந்து பறக்குதே இவள் மனமெனும் பஞ்சும்!
உள்ளத்தில் ஒன்றாய் வெளியில் ஒன்றாய்
பாத்திரமேற்று நடிக்கிறதே சில நெஞ்சங்களெனும் நஞ்சும்!
இவையால் காயமுற்ற இவள் மனதில்
நிதம் ரணங்கள் மாத்திரமே எஞ்சும்!
அள்ள அள்ள குறையா
அன்பு பாத்திரமாய் இவள் நெஞ்சம்!
அள்ளிக்கொண்ட மனங்களேனோ
அன்பை திருப்பிதர கஞ்சம்!
உறவுகள் விட்டு சென்றால் இவள்
உள்ளமும் இம்மண்ணில் நிலைத்திருக்க அஞ்சும்!
நிலையில்லா உலகில்
உறவுகள் நினை மறுப்பினும் மறப்பினும்
அன்பினை தேட மறுக்க மறுக்கிறதே இந்த பிஞ்சும்!



கவிஞர் க.ஹுஸ்னி,இலங்கை

# மனக் குடில்

ஏழையின் சிறு குடிலிலும்,
இசைக்கிறதே
இளையராஜாவின்,
கீதாஞ்சலி!
மனம் என்னும்
மாண்புறு குடிலே,
ஒரு போதும்
அனுமதித்திடாதே,
முராரி ராகங்களை!
கதவுகள்
மூடப்பட்டிருந்தாலும்,
அங்கே
அன்புச் சாளரங்கள்,
எப்போதும்
திறந்திருக்கட்டும்!
திறக்கப்பட்ட சாளரங்களும்
வரவேற்கட்டும்
உனக்கான அற்புத,
நிகழ்வுகளை,
அனுதினமும் உனக்கென,
விதிக்கப்பட்ட,
சில சில்லறை
வேலைகளின் சுகமும்
பெரிதே!
நீ தேடும் அன்பினை,
உன் எதிர் இருப்பவர்க்கும்,
பகிர்ந்தால் என்ன?



புரிதலும், பகிர்தலுமான,
இனிய வாழ்வே,
எப்போதும் என்றென்றும்,
நிலையானது அல்லவா!
சிறு குடிலிலும் நீ
சீமானாக வாழ்ந்திட,
அன்பென்னும்
அரியாசானம்,
உனக்காகக் காத்திருக்கிறது,
உன் உயரிய மனக்குடிலில்!

கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# வண்ணத்துப்பூச்சி

பார்த்ததும் பரவசம்
கொள்ளும் பல வண்ணங்கள்
பிடித்து பார்க்க ஆவலை
தூண்டும் புது எண்ணங்கள்



பூக்கள் மீது அமர்ந்து
இருப்பாய் அழகாக
பூக்கள் அழகா
நீ அழகா என்று வியக்கும் தருணம்

பறந்து வந்து கைகளில் அமர்ந்தாய் சிலநேரம்
பறந்து சென்றது மனதும் தான்
பலநேரம்

பறந்து செல்லும் அழகிய வண்ணத்துப் பூச்சியே
உன் மென்மையான இறகை பிடித்து பார்க்க ஆசை உண்டு
ஆனால்,என்றோ ஓர் நாள் தான்
தென்படுகிறாய்

பார்த்து விட்டால் மனதுக்குள்
அப்படி ஒரு மகிழ்ச்சி
அதுவே என் கண்களுக்கு நிறைவான பொருட்காட்சி.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# மணிப்பூர்

பாரத தாய் பரிதவிக்கிது,
ஆடை இல்லாமல் அழுது புலம்புது,
நாணம் கொண்ட பெண்ணினம் தான்
நானும் இங்கே உண்ணினம் தான்
உடை இல்லா உன் உடலை கண்டு
உடைந்துதான் அழுகிறேன்
ஆடவர் கூட்டம் ஒன்று, ஆதிக்க சாதி ஒன்று
சிதைத்து சின்னாப்பின்னமாக்கிய
சதைகளை கண்டு ஒப்பாரிதான் வைக்கிறேன்
சமூகத்தின் சமநிலை நிலவ
எங்கள் சதைகள்தான் கிடைத்ததா?
வீதிகளில் போராட்டம் நிற்க
பிறப்புறுப்பை பிச்சி தின்பதா?
மணிப்பூரின் மண்வாசம்
உலகெங்கும் வீசுகிறது
அதில் பாலியல் வன்கொடுமை பற்றி
பாரத தாயே பேசுகிறது
ஏனென்றால்
அதுவும் அநீதியால் ஆடை இழந்து
அம்மணமாய் நிற்கிறது
தேடி போய் தேசிய கொடி எடுத்து
போர்த்து விடுங்கள்
நிச்சயம் நீதி தேவதையாய் உருவெடுப்பாள்
அநீதி விதைத்த அனைவரின் வாழ்வையும்
கருவறுப்பாள்.




கவிஞர் ஞா.மணிமாறன்,இரெட்டியூர்

# இந்த நிலை மாற வேண்டும்

சக மனிதனை மதித்திடு
சமத்துவம் மட்டுமே பேசிடாதே
சமத்துவமாய் வாழ கற்றுக் கொள்
மலத்தை அகற்றிடும் மனிதனுக்கு
மனிதாபிமானமும் இருக்கிறது என்பதை புரிந்து கொள்.

கோயில் கருவறை உனக்கு மட்டுமல்ல
இந்த உலகின் உயிர்களுக்கே பொதுவானது
என்பதை அறிந்து செயல்படு
அதை அறியாமலே அலைந்து திரியாதே

தீண்டாமை ஒரு பெருங்குற்றம் என்று
பல முறை படித்தும் என்ன பயன்?
தீயில் விழுந்து கருகிப் போனவர்களை கூட
உன் தீண்டாமை தடுக்கின்றது
அதுதானே பெருங்குற்றம்.

குடிக்கும் நீரின் தொட்டியை
சுத்தம் செய்ய வேண்டாம்
ஆனால்
அசுத்தம் மட்டும் செய்யாதே.

உன்னை கட்டி வைத்து அடித்தால்
வலிக்குமென்று அறிவாய்
சக மனிதனும் அதுபோல தானே
"வலி " உனக்கும் சக மனிதனுக்கும் ஒன்றுதான்
என்பதை எப்போது உணர்வாய்?

பெண்மையை போற்றுவோம்
பெண்ணினத்தை காப்போம்
பெண் உரிமையை மீட்போம்
பாலியல் கொடுமைகளை ஒழிப்போம்
இவையெல்லாம்
நிர்வாணமாக்கப்பட்ட ஆடையைப் போல
காற்றில் பறக்கின்றது.

இந்த நிலை மாற என்ன செய்ய போகின்றோம்?



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# சதுப்பு நில பாதுகாப்பு (ஜூலை 26)

நிலங்களை ஐவகையாய்ப் பகுத்தனரே தமிழர்களும்!
முல்லை  நிலமென்பது காடும் காடுசார்ந்த பகுதிகளும்!
முல்லை, மருதம்,நெய்தல் இம்மூன்றும்
சந்திக்கும் இடமே சதுப்புநிலம் என்றாகும்!
தன்னிடம் நீர்பாயும் காலத்தில் சேமித்து
வேனிற்காலத்தில் வெளிப்படுத்தும் சதுப்பு நிலம்!
நன்னீர் நிலமென்றும் உவர்நீர் நிலமென்றும்
தண்ணீரால் இருவகையாய் சதுப்பு நிலங்களுண்டு!
உவர்ப்புத் தன்மையுள்ள சதுப்பு நிலக்காடுகள்
அலையாத்திக் காடுகள் என்றழைக்கப் படுவதுண்டு!
மாங்குரோவ் காடுகளென ஆங்கிலத்தில் இதன்பெயராம்!
இந்தியாவில் சதுப்பு நிலப்பரப்பில்  எண்பது
விழுக்காடு அலையாத்திக் காடுகளே! கடலில்
மூழ்கி நிலைத்திருக்கும் வேரமைப்பும், உப்பை
வடிகட்டும் தன்மையும்,சீற்றம் நிகழ்கையிலே
கடல்நீரைத் தேக்கிவைத்து, கடலரிப்பைத் தடுக்கின்ற
அரணாகும் இக்காடே! ஆறுகளின் வழியாக
வருகின்ற கழிவுகளைத் தடுத்து கடல்நீரின்
தூய்மைதனைக் காத்திருக்கும்!காலநிலையை சமன்செய்யும் !
சதுப்புநில இலைகள் நுண்ணுயிர்களுக்கு உணவாகும்!
நண்டுகள், சிறுமீன்கள், இறால்கள் அதையுண்ணும்!
சிறுமீன்கள், பெரிய மீன்களுக்கு இரையாகும்!
கடல்வளம் காப்பதிலே முதலிடம்  சதுப்புநிலம்!
இறால்கள் இனம்பெருக, பவளப் பாறைகள்
உருவாகத் துணைநிற்கும்! கரியமில வாயுவினை
பெருமளவில் உட்கவரும் ! ஆழிப்பேரலையை அமைதிப்படுத்தும்!
ஜூலை இருபத்து ஆறாம்நாள் அலையாத்திக்
காடுகளின் பாதுகாப்பு தினமாகும்! சுற்றுச்சூழல்,
கடல்வளத்தைக் காக்கின்ற அலையாத்திக் காடுகளை
மீட்டெடுப்போம்! சதுப்புநிலம் காப்போம்! பயனடைவோம்!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# நானே முதல்வர்

ஒருநாள் முதல்வர்ராக நான் இருக்க
முடிந்தவரை எல்லாம் மாற்றம் செய்து இருக்க
பாலியல் வான் கொடுமை செய்பவனை
என்கவுண்டர் செய்து முடிக்க
லஞ்சம் ஊழல் செய்யும் மனிதனை
சிறையில் அடைக்க
அதிகாரத்தை கையில் எடுக்க
எல்லாம் துறையிலும் மாற்றம் செய்து முடிக்க
மக்களுக்காக நாம் உழைக்க
மனிதநேயம் மனதில் இருக்க
எல்லாம் தவறாய் இருக்க
மனிதன் கண்ணீர் வடிக்க
மனசாட்சி எனக்கு இருக்க
முதவராய் நானே மாறி இருக்க
முடிந்தவரை எல்லாம் மாற்றம் செய்து முடிக்க
பல திட்டங்களை அதிரடியாய் செய்து முடிக்க
சாதாரண மக்கள் நிலையாய் அறிந்து இருக்க
ஒரு நாள் அதிகாரத்தில் பல கேள்விக்கு
பதில் கிடைத்து இருக்க



அகர முதல

கவிஞர் செள.தாரா,சேலம்

# எதிர் நீச்சல்

வாழ்க்கையில் எதுவுமே கிடைக்காது.
எதையும் சாதிக்க முடியாது.
நீ எதிர் காலத்தை நோக்கி
எதிர் நீச்சல் போட்டு கொண்டே இரு.



அப்போது தான்
நீ வெற்றி எனும் பாதையில்
கடந்து போக முடியும்
நீ தொலைத்தை மறுபடியும்
தேடி பார்க்க முடியும்.

எங்கே வெற்றி கிடைக்கும்
என்று எதிர் பார்க்காதே.
உன் உழைப்பை நம்பி
வாழ் கற்றுக் கொள்.
எதிர் காலம் சிறப்பாக அமையும்.

ஒவ்வொரு நாளும்
வாழ்க்கையில் போராடி
ஜெயித்து காட்டு
உனக்கு முன்னாடி நிற்கும்
வெற்றி பற்றி கவலைப் படாதே.

அது உனக்கு தோல்வி
தான் கொடுக்கும்.
உனக்காக பாதையில்
எதிர் நீச்சல் போட்டு பார்.
வெற்றி உன்னை தேடி வரும்.

வாழ்க்கை போராட்டம் தான்
போராடி எதிர் நீச்சலுடன்
வெற்றி காண முயற்சி செய்.
எதிர் நீச்சலே தேவையே இல்லை.

வாழ்க்கையும் எதிர் தான்
காலமும் எதிர் நீச்சல்
வெற்றியும் எதிர் நீச்சல் தான்
எதிர் நீச்சல் இல்லாமல்
எதையும் சாதிக்க முடியாது.

சாதிக்க நினைத்து விட்டால்
சோதனைகள் பல சூந்து கொள்ளும்
எதிர்த்து எதிர் நீச்சல் போடு.
வெற்றி உனக்கே நிச்சயம்.

கவிஞர் தமிழருவி.ஏ.கோபி,நத்தம்

# ந.மு.வேங்கடசாமி நாட்டார்

(கட்டுரை)



தஞ்சை மாவட்டம் நடுக்காவேரியில் (1884) பிறந்தார். நடுக்காவேரி முத்துச்சாமி வேங்கடசாமி நாட்டார் என்பது முழுப்பெயர்.

சிறு வயதில் ஏற்பட்ட உடல்நலக் கோளாறு, வேங்கடேசப் பெருமாள் அருளால் நீங்கியதால், சிவப்பிரகாசம் என்ற பெயரை 'வேங்கடசாமி' என பெற்றோர் மாற்றினர். உள்ளூர் திண்ணைப் பள்ளியில் 4-ம் வகுப்பு வரை படித்தார். நெடுங்கணக்கு, இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று என கணக்கு சம்பந்தப்பட்ட அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

தந்தையிடம் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், அந்தாதி, கலம்பகம் உள்ளிட்ட நூல்களைக் கற்றார். தமிழ் இலக்கண, இலக்கியங்களை தானாகவே கற்றறிந்தார். மதுரை தமிழ்ச் சங்கத்தின் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் ஆகிய தேர்வுகளை எழுதி முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

வள்ளல் பாண்டித்துரை தேவரின் கையால் தங்கப் பதக்கம் பெற்றார். 24-வது வயதில் திருச்சி எஸ்பிஜி கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். கோவை தூய மைக்கேல் மேல்நிலைப் பள்ளியில் ஓராண்டு பணியாற்றினார். திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் தலைமை தமிழ் பேராசிரியராக 24 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

இவரது திறமையைக் கேள்விப்பட்ட அண்ணாமலை அரசர், இவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக நியமித்தார். அங்கு 7 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, ஓய்வு பெற்று சொந்த ஊர் திரும்பினார். பின்னர் தமிழ் அறிஞர் உமா மகேஸ்வரரின் விருப்பத்துக்கு இணங்க, கரந்தை புலவர் கல்லூரியில் 4 ஆண்டுகள் ஊதியம் பெறாமலேயே மதிப்பியல் முதல்வராகப் பணியாற்றினார்.

# ந.மு.வேங்கடசாமி நாட்டார்

(கட்டுரை)



பாரதியார் 1912-ல் இவரது வீட்டுக்கு வந்து, சிலப்பதிகாரம், தொல்காப்பிய நூல்களில் சில இடங்களுக்குப் பொருள் கேட்டு அறிந்ததாகக் கூறப்படுகிறது. சிறந்த தமிழ் அறிஞரான அ.ச.சரவண முதலியாருடன் இணைந்து திருவிளையாடல் புராணத்துக்கு உரை எழுதினார்.

அரிய கருத்துகளையும் மாணவர்களுக்கு எளிதாக விளங்க வைப்பதில் வல்லவர். புலவர்களின் நூல்களில் உள்ள பிழைகளை துணிச்சலாக சுட்டிக்காட்டுவார். நிறைய எழுதிக்கொண்டே இருந்தார். பல ஆய்வு நூல்கள், உரை நூல்களைப் படைத்துள்ளார். பல புலவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பல நூல்களை எழுதினார்.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகத்தார் கேட்டுக்கொண்டதால் தேவாரத் திரட்டு, தண்டியலங்காரப் பழைய உரை, யாப்பருங்கலக் காரிகை உரை ஆகியவற்றுக்கு திருத்தங்கள் செய்து கொடுத்தார். இவரது பல நூல்கள் பல்கலைக்கழகங்களில் பாட நூலாக இடம்பெற்றன.

சிறந்த சொற்பொழிவாளரான இவருக்கு, சென்னை மாகாண தமிழ்ச் சங்கம் 1940-ல் 'நாவலர்' பட்டம் வழங்கியது. புதிய செய்தியோ, புதிய ஆய்வுக் குறிப்போ இல்லாமல் இவரது உரை இருப்பதில்லை. எனவே, இவரது சொற்பொழிவைக் கேட்க பலரும் வெகுதொலைவில் இருந்து நடந்தே வருவார்களாம்.

'நாட்டார் ஐயா' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டார். எளிமையாக வாழ்ந்தவர். அனைவரிடமும் இனிமையாக பழகுவார். வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தொண்டாற்றிய 'நாவலர்' நா.மு.வேங்கடசாமி நாட்டார் 1944-ம் ஆண்டு மறைந்தார்.

நன்றி : https://www.hindutamil.in/

கவிஞர் அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
உரக்க சொல்வோம்
அகர முதல
நாளை நமதே
AAGARAMUTHALAA NEWS
அகர முதல செய்திகள்
செயலை விதையுங்கள்; பழக்கம்
உருவாகும். பழக்கத்தை விதையுங்கள்;
பண்பு உருவாகும். பண்பை
விதையுங்கள்; எதிர்காலம் உருவாகும்.
/Aagaramuthalaa
/www.aagaramuthalaa.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com